1986 நவம்பர் 25]

நிலம் அரசுக்குச் சொந்தமானதா? அந்தத் திட்டம் எப்போது நிறைவேறும். இப்போது இருக்கக்கூடிய நிலையிலே அது ரூ. 9 கோடியிலிருந்து ரூ. 15 கோடிக்கு ஆகும். எனவே இனியும் காலம் கடத்தினால் அது மிக அதிக அளவிலே ஆகும் என்பதைக் கருத்திற்கொண்டு, உடனடியாக முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : நான் ஏற்கனவே சொல்லிய நேரத்தில் சட்டப்படி இருக்கின்ற பிரச்சனை என்று சொன்னேன். அதையெல்லாம் முடிவுக்கு கொண்டுவர அரசாங்கம் முயற்சிகளை துரிதமாக எடுத்துக் கொண்டிருக்கிறது.

கன்னியாகுமரி தொகுதி பொய்கை அணைத் திட்டம்

185—(*வினா எண் 9572)—திரு கோ. பெருமாள்பிள்ளை: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) கன்னியாகுமரி தொகுதி பொய்கை அணைத் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) எப்போது வேலை தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :

(அ) ரூ. 1087 இலட்சம் செலவில் பொய்கை ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கான திட்ட அறிக்கை அரசுக்கு வந்துள்ளது. இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) திட்டத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கிய பின்னர் வேலை தொடங்கப்படும்.

திரு கோ. பெருமாள் பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் உள்ள பொய்கை அணைத்திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதற்கு நான் நன்றிதெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். குமரி மாவட்டத்தினுடைய நிலைமையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது செழிப்பான மாவட்டமான அது இன்றைக்கு வறட்சியான நிலைமையிலே இருந்துகொண்டிருப்பதை மனதிலே கொண்டு, இந்தத் திட்டத்தை நடத்தித் தருவதற்கு அரசு மறுபரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : உறுப்பினர்களுடைய கருத்துக்கு ஏற்றாற்போல் இந்த அரசினுடைய பரிசீலனையைத் துரிதப்படுத்த வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி மாடர்னைசேஷன் ஸ்கீம்மில், காவேரி டெல்டா பகுதியில் ஒதுக்கப்பட்ட பணம் காவேரி பிரச்சனைக்கு செலவிடப்படாமல் இருக்கிறது. கிட்டத்தட்ட 80 கோடி ரூபாய் என்று சொல்கிறார்கள். இந்த செலவிடமுடியாத தொகையை, புதிய அணைகள் கட்டுவதற்கு பயன்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி செலவழிக்கப்படாமல்இருப்பதாக எனக்குத் தகவல் இல்லை. தனிக்கேள்வி போட்டால்பதில் சொல்ல முடியும். ஆனால் ஒரு திட்டத்திற்கு ஒதுக்கிய பணத்தை வேறு திட்டத்திற்கு ஒதுக்க முடியாது

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கன்னியாகுமரியில் இருக்கின்ற அணைக்கட்டுகளின் மூலம் வருகின்ற தண்ணீரை அந்த மாவட்டத்திற்கும் பயன்படுத்தி, ராதாபுரம் கால்வாய் வழியாக திருநெல்வேலி மாவட்டத்தின் தென் பகுதிகளுக்கும் பயன்படுத்தவேண்டுமென்று காமராஜர் காலத்திலேயே ராதாபுரம் கால்வாய் என்ற ஒன்று வெட்டப்பட்டது. ஆனால் இப்போது இங்கே தண்ணீர் போனால் அங்கே இல்லை. அங்கே போனால் இங்கே இல்லை என்ற நிலையில் கூடங்குளம் அனல் மின் நிலையம் வருவதற்கு கூட தண்ணீர் பற்றாக்குறையினாலே காலதாமதம் ஏற்படுவதாக ஒரு கருத்து நிலவுகிறது. எனவே பொய்கை அணைத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றினால், கன்னியாகுமரி மாவட்டம் ராதாபுரம் கால்வாய் வழியாக திருநெல்வேலி மாவட்டத்தின் தென் பகுதி, கூடங்குளம் அனல் மின் நிலையம் அதன் மூலம் மின்சார உற்பத்தி அத்தனையும் கிடைக்குமாதலினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகத்துரிதமாக இந்த ஆய்வை முடித்து வேலையைத் தொடங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர் இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்துக்கு ஏற்றாற்போல் அந்த ஆய்வைத் துரிதப்படுத்த வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மாம்பழத்துறை அணை கட்டுவதற்கான திட்டம் அரசால் ஏற்கப்பட்டு, மதிப்பீடுகளும் அரசால் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அது எப்போது நிறைவேற்றப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடப்பட வேண்டும்.

1986 நவம்பர் 25]

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கும் வறட்சி நிலையைக் கணக்கில் எடுத்து, மழை காலத்தில் தேக்கி வைக்க முடியாமல் சமுத்திரத்திற்கு சென்று கொண்டிருக்கும் தண்ணீரைத் தேக்கி வைக்கின்ற முறையில் பள்ளிமுட்டம் அணையைக் கட்டுவதற்கான ஒரு ஆய்வு செய்யப்பட்டது. அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டிருக்கிறதா? ஆம் என்றால், அதற்கான விவரங்கள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தனிக்கேள்வி போட்டால் சரியான விவரங்கள் சொல்லப்படும்.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து செயல் படுத்தவேண்டும் என்ற நல்ல நோக்கோடு செயல்படுகின்றபோது அதைப் புரிந்துகொள்ளாதவர்களும், பொறாமைப்படுகின்றவர் களும் அல்லது அந்த திட்டத்தால் பாதிக்கப்படுகின்றவர்களும் கோர்ட்டுகளில் சென்று தடை உத்தரவைப் பெற்றுவிடுகிறார்கள். எனவே, அப்படிப்பட்ட திட்டங்களை ஆரம்பிக்கின்ற நேரத்தில், அவர்களுடைய தடையை, தடை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு அரசாங்கம் செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கருத்துக்கள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.